முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 26 திகதி முதல்

சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 03 திகதி வரை

(12.11.2023 ஞாயிறு முதல் 19.11.2023 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அவதார ஞான வள்ளலே
   அன்னதான மகிமை புரிந்து
   அவனிகாக்கும் அற்புதம் நடத்தும்
   அண்ணலே ஆறுமுக ஞானியே
2. ஞானியே அரங்கமகா தேசிகனே
   ஞாலமதில் அகத்தியனும் உமைபோற்றி
   இனிமைபட இந்தியா தமிழகத்தில்
   இயம்பிட சோபகிருது துலைதிங்கள் இருபானாற் திகதிமேல்
3. மேலாக தேள்திங்கள் சூலதிகதிவரை
   மேதினியில் நடக்கும் வாரநிகழ்வாக
   காலமதில் எதிர்கால பலன்குறித்த ஆசி
   கண்டுரைப்பேன் அரங்கமகான் கேட்க
4. கேட்க மழைவளம் பெருகி
   குறிப்பாக பெருநகரங்களில்
   கட்டம் பாதிப்பு மிகுதியாகும்
   கடல் பகுதி செயல்பாடுகளெல்லாம்
5. எல்லாம் நட்டமிடர் ஆகும்
   எதிர்காலம் தேடி செல்பவர்க்கு
   அல்லல் பாதிப்பு இயற்கை சீற்றம்
   ஆபத்தும் காட்ட நேருமப்பா
6. அப்பனே இந்தியா தமிழகத்தில்
   அளவிலா மழைவளம் கூடும்
   காப்பான செயல்திட்டமிடலால்
   கண்டுரைப்பேன் அரசுகள் பாதிப்பை

7. பாதிப்பை தவிர்க்க முயலும்
   பாருலகில் ஞானிகள் வழிவர
   பாதிப்பே இல்லா ஞானபூமியாக
   பாரதம் தமிழகம் ஆற்றல் பெறும்
8. ஆற்றல்பட ஆள வேண்டிய
   அதிகார வர்க்கம் பல
   மாற்றலாகி மதிப்பிழந்து
   மக்களுக்கு செய்த தீங்கினால்
9. தீங்கினால் நீதியின் பிடியில்
   தெரிவிப்பேன் சோடை போகும்
   பங்கம் நேரும் ஆளுமைகட்கு
   பாடிட இந்தியா தமிழக வளர்ச்சிக்கு
10. வளர்ச்சிக்கு ஆளுமை சக்திகள்
   வணங்கி தருமவழி வந்து
   தளர்வின்றி உண்மைபட சேவை
   தந்தால்தான் வரலாறு படைக்க நேரும்
   வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 26ம் நாள் 12.11.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 03ம் நாள் 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

யுக மாற்றத்திற்காகவே முருகப்பெருமானின் ஆற்றலாக வந்துதித்த அவதார ஞான வள்ளலே எல்லையில்லாது தர்மங்களை செய்து தர்மபலம் பெருக்கி மகிமை புரிந்து இவ்வுலகை காத்து அற்புதங்களை நிகழ்த்துகின்ற அண்ணலே ஆறுமுக மகா தேசிகரே மகா ஞானியே ஆறுமுக அரங்க மகா தேசிகரே அகத்திய மகரிஷி யானும் உமைப் போற்றியே இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 26ம் நாள் 12.11.2023 ஞாயிற்றுக்கிழமை முதல் கார்த்திகை மாதம் 03ம் நாள் 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக அரங்கா தாம் கேட்க உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வரும் நாட்களிலே நாட்டினில் மழை அதிகமாக பெய்யும், குறிப்பாக பெருநகரங்களிலே மழை பொழிவு அதிகமாகி வெள்ளம் உருவாகும் வாய்ப்பும் அதனால் மக்கள் துன்பம் அடையவும் நேரும் பாதிப்புகள் சற்று அதிகமாக இருக்குமப்பா. கடல் பகுதி சார்ந்த செயல்பாடுகள் நஷ்டங்களை உண்டாக்கும் கடல் சார்ந்த வணிகம் மற்றும் ஆதாயம் ஈட்ட முனைபவர்களுக்கு ஆபத்தும் கஷ்டமும் இயற்கை சீற்றங்களால் உண்டாகும்.

இனி வரும் நாட்களில் பருவமழை தீவிரம் அடைவதுடன் அதிக அளவில் ஒரே நேரத்தில் பெய்து வெள்ள அபாயம் நேரிடலாம். ஆதலினாலே அரசுகள் முன் கூட்டியே தக்க திட்டமிடலும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் முன் கூட்டியே செயல்படுத்தினால் வருகின்ற பாதிப்பை வெகுவாக தவிர்க்க இயலுமப்பா.

ஆயினும் சர்வ வல்லமை மிக்க ஞானிகள் கூறும் தர்மத்தின் வழியினில் நாடு நடந்திட்டால் இப்படிப்பட்ட இயற்கை சீற்றங்களில் இருந்து நாடு முழுப்பாதுகாப்பை ஞானிகள் ஆசியால் பெறுவதுடன் ஞான பூமியாகவும் நாடு மாறிடுமப்பா. நாடு மேன்மேலும் ஆற்றல் பெற்று மேன்மை அடையுமப்பா.

ஆள வேண்டிய பல அதிகார வர்க்கங்கள் அவர்களது பதவியில் இருந்து மாற்றலாகி மதிப்பை இழந்து விடுவர். இது அவர்கள் மக்களுக்கு செய்திட்ட தீங்கினால் உருவானதப்பா. அவர்கள் செய்திட்ட தீங்கினால் அவர்கள் நீதியின் பிடியில் அகப்பட்டு மதிப்பிழப்பார்கள்.

ஆகவே பொறுப்பில் உள்ளவர்கள் எல்லாம் தர்மத்தின் வழிதனை கடைப்பிடித்து ஞானிகளை பக்தியுடன் வணங்கி வருவதுடன் மக்களுக்கு சேவை செய்து வரவர நமது தேசம் வரலாறு படைக்குமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

—சுபம்—